


**06. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. கல்வியை வாழ்க்கை கட்டமைப்பிற்கான கருவியாக மாணாக்கர் கருத வேண்டும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வில் வலியுறுத்தியுள்ளார்.

2. அம்ரித் பாரத் ரயில்நிலைய மேம்பாட்டு பணிகளுக்காக ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. இணையதள பரிவர்த்தனை முறைகேடுகளால் பணத்தை இழக்கும் வாடிக்கையாளர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை இழப்பீட்டுத்தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

4. தமிழ்நாட்டில் பல்துறை சார்பில் மூவாயிரத்து 982 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்புகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்துடன், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

5. ஹராரேயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி

இறுதியாட்டத்தில் இங்கிலாந்திற்கு எதிராக இந்தியா முதலில் பேட் செய்கிறது.

இனி விரிவான செய்திகள்

*************

பரிக்சா பே சர்ச்சா

நாடுமுழுவதும் உள்ள மாணவ மாணவிகள் தங்களது தனித்துவமான கற்றல்முறைகள் மீது நம்பிக்கை வைத்து அதனை பின்பற்றுவதன் அவசியத்தை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

நாடுமுழுவதும் 10, 12-ம் வகுப்பு பொது தேர்வு எழுதும் மாணாக்கரின் தேர்வு பயத்தை களையும் பரிக்சா பே சர்ச்சா கலந்துரையாடல் நிகழ்வின் ஒருபகுதியாக, காணொலி வாயிலாக இன்று உரையாடிய பிரதமர், ஒவ்வொரு மாணவரும், ஒரு தனிப்பட்ட கற்றல் முறையை பின்பற்றுவதாக எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

முக்கிய கேள்வி பதில்கள், கேள்வி வங்கிகள், வெற்றிக்கான குறுகிய வழிகாட்டிகள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

ஆசிரியர்கள் பெற்றோர் மற்றும் ஆலோசகர்களின் கருத்துக்களையும் மாணாக்கர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

பாட திட்டங்களை முழுமையாக பயிற்றுவித்து கடின உழைப்பை ஊக்கப்படுத்தி, உள்ளடக்கங்களை

புரிந்துகொண்டு கற்பது, தேர்வு அடிப்படையிலான கற்றலை தவிர்த்து, ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான கல்வியை பயிற்றுவிப்பது போன்றவற்றை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

மாணாக்கர் மனதை ஒருமைபடுத்த யோகா பயிற்சியை மேற்கொண்டு, ஊட்டசத்துமிக்க உணவுகளை உட்கொண்டு, போதிய ஒய்வுடனும், மனநலத்தை பேண மாணாக்கர் பழகிகொள்ள வேண்டும் என்றார்.

தேர்வு மதிப்பெண்கள் மட்டுமே வாழ்க்கை இல்லை என்று கூறிய பிரதமர் வாழ்க்கையை வடிவமைக்க கல்வியும், தன்னையே ஆய்வு செய்துகொள்ள தேர்வுகள் ஒருதளமாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

மாணாக்கரின் இலக்கு மதிப்பெண்கள் மட்டுமல்லாமல், முழுமையான வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வாழ்க்கை கட்டமைப்பிற்கான கருவியாக கல்வி இருக்க வேண்டுமே தவிர, சுமையாக அதனை கருத கூடாது என்று குறிப்பிட்டார்..

தங்களுக்குள் இருக்கும் கற்றல் உணர்வை சுறுசுறுப்பாகவும், எதிர்நோக்குடனும் வைத்திருந்து முழுமையான கற்றல் நடவடிக்கைகளில் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பள்ளிகாலங்களிலேயே வலுவான அடித்தளத்தில் மாணாக்கர் கவனத்தை செலுத்துவதோடு, படைப்பாற்றல் திறனுடன் பொழுதுபோக்குகளை ஆக்கப்பூர்வமாக

முன்னெடுத்து சென்று வெற்றிக்கும், புதிய கண்டுபிடிப்புகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நேர்மையாக இருப்பதன் மூலமே தன்னம்பிக்கை உருவாகும் என்று கூறிய பிரதமர், பெரிய கனவுகளுடன் அச்சமின்றி சுயசரிதைகள் மூலம் ஊக்கம்பெற்று செயலாற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பிரதமர், கோவை, ராய்ப்பூர், குவஹாட்டி தேவ்மோஹ்ரா பகுதிகளில் உள்ள மாணாக்கருடன் கலந்துரையாடிய நிலையில், நான்கரை கோடிக்கும் அதிகமான மாணாக்கர் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் இந்நிகழ்விற்காக mygov இணையதளத்தில் பதிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பிரதமரின் உரை குறித்து மாணாக்கர் தெரிவிக்கையில்

வாய்ஸ்

*************

அஷ்விணி வைஷ்ணவ்

அம்ரித் பாரத் ரயில்நிலைய திட்டத்தின் கீழ் 120 ரயில்நிலைய மேம்பாட்டு பணிகள் நிறைவடைந்துள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் மேலும் மேம்படுத்தலுக்காக ஆயிரத்து 300 ரயில்நிலையங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக கூறினார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் ரயில்வே துறையில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், பயணியர் பாதுகாப்பு மற்றும் வசதிகளுக்கு அரசு உயர்முன்னுரிமை வழங்குவதாகவும் கூறினார்.

*************

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

நாட்டில் 47 லட்சம் விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

வரும் நிதியாண்டு இறுதிக்குள் 11 கோடி விவசாயிகளுக்கு அடையாள அட்டைகளை உருவாக்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தேசிய பயிர் காப்பீடு இணையதளத்தில் 90 லட்சம் விவசாயிகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

விவசாயிகளின் வருவாயை உயர்த்தி உணவ பாதுகாப்பை உறுதி செய்து சாமானிய மக்களுக்கு ஊட்டசத்து உணவுகளை வழங்குவதே அரசின் குறிக்கோள் என்றார்.

உணவுதானிய உற்பத்தியை அதிகரிப்பது, செலவுகளை குறைப்பது, நியாயமான விலைகள் விவசாயிகளுக்கு கிடைக்க செய்வது பயிர் இழப்பீட்டிற்கு உரிய தொகை வழங்குவது போன்றவற்றை நோக்கமாக கொண்டு அரசு செயலாற்றுவதாக குறிப்பிட்டார்.

வேளாண்மையை முன்னெடுத்து செல்ல விரிவான தொழில்நுட்ப பயன்பாட்டை அரசு மேற்கொள்வதாகவும் கூறினார்.

*************

நாடாளுமன்றம்

பல்வேறு பிரச்சனைகளில் எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை நாள் முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும் அவைதலைவர் திரு.ஓம்.பிர்லா கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முற்பட்டபோது எதிர்கட்சியினர் அவையின் மைய பகுதியில் குழுமி அமளியில் ஈடுபட்டதால் அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது எதிர்கட்சியினரின் அமளி தொடரவே இதனூடே அமைச்சகங்கள் சார்ந்த ஆவணங்கள் அவையில் சமர்ப்பிக்கப்பட்டன.

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட் குறித்த விவாதத்திற்கான அலுவல்களை அவையில் எடுத்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதால் மக்களவை வரும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

*************

ரிசர்வ் வங்கி

இணையதள பரிவர்த்தனை முறைகேடுகளால் பணத்தை இழக்கும் வாடிக்கையாளர்களுக்கு 25 ஆயிரம்

ரூபாய் வரை இழப்பீட்டுத்தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடப்பு நிதியாண்டிற்கான ஆறாவது, இறுதி இருமாத நிதிக்கொள்கையை இன்று வெளியிட்டு பேசிய ஆளுநர் அங்கீகாரம் இல்லா மின்னணு பணபரிவர்த்தனைகளுக்காக வரைவு நெறிமுறைகள் உத்தேசிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

வாடிக்கையாளர்களின் பாதுகாப்பான டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளுக்காக உரிய நெறிமுறைகள் கொண்டுவரப்படும் என்றார்.

முறைகேடுகளை தவிர்க்க கடன்களை வசூலிப்பது, தொடர்பான பல்வேறு நடைமுறைகள் மறு ஆய்வு செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

முன்னோடி வங்கி திட்டம், வேளாண் கடன் அட்டை திட்டம் மற்றும் வர்த்தக தொடர்பு மாதிரிகளுக்கான திருத்தப்பட்ட வரைவு நெறிமுறைகளும் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் கூறினார்.

விளம்பரங்கள், சந்தை பொருட்கள் விற்பனை, நிதிசார் பொருட்கள் சேவை போன்றவற்றிற்கு விரிவான நெறிமுறைகள் பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதனிடையே ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான ரிப்போ வட்டி விகிதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

வரும் நிதியாண்டின் முதல் காலாண்டில் பணவீக்க விகிதம் 4 சதவிகிதமாகவும்,

2-ஆவது காலாண்டில் 4.2 சதவிகிதமாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலைமதிப்புமிக்க உலோகங்களின் விலை உயர்வால் பண வீக்க விகிதம் கணிக்கப்பட்டதற்கும் சற்று அதிகமாகி உள்ளதாக வங்கி ஆளுநர் கூறினார்.

வரும் நிதியாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி முதல் காலாண்டில் 6.9 சதவிகிதமாகவும்,

2ஆவது காலாண்டில் 7.0 சதவிகிதமாகவும் இருக்கும் என்று தெரிவித்தார்.

*************

சஞ்சய் சேத்

சவுதி அரேபியாவில் வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்க உள்ள 3ஆவது உலக பாதுகாப்பு தளவாடங்கள் கண்காட்சியில் இந்தியாவின் சார்பில் பாதுகாப்பு இணை அமைச்சர் திரு.சஞ்சய் சேத் தலைமையிலான உயர்நிலை பிரதிநிதி குழு பங்கேற்கும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் இந்தியாவின் தளவாடங்களின் சிறப்பை எடுத்துரைக்கும் அரங்குகள் இடம்பெறும் என்றும் கூறியுள்ளது.

பீரங்கிகள், செயற்கைகோள்கள், நவீன தளவாடங்கள், ரடார் உள்ளிட்ட கருவிகள் இதில் காட்சிபடுத்தப்பட உள்ளது.

இந்த கண்காட்சியின் ஒருபகுதியாக சவுதி அரேபிய பாதுகாப்பு அமைச்சருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

*************

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் பல்துறை சார்பில் மூவாயிரத்து 982 கோடி ரூபாய் மதிப்பிலான கட்டமைப்புகளை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று சென்னை தலைமை செயலகத்திலிருந்து திறந்து வைத்ததோடு புதிய பணிகளுக்கும் அடிக்கல் நாட்டினார்.

இதன்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள 6 சமத்துவபுரங்கள்,

நாமக்கல் மாவட்டம் புதுப்பட்டி முதல் கெடமலை வரை சாலை பணிகள், அலுவலக கட்டடங்கள், பாலங்கள், அங்கன்வாடி, பள்ளிக் கட்டடங்கள் ஆகியவை இதில் அடங்கும்

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ், பல்வேறு மாவட்டங்களில் 9 ஆயிரத்து 696 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளையும் திறந்து வைத்தார்.

சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில், சென்னை கிண்டியில் கடல் ஆமை பாதுகாப்பு மையத்திற்கு அடிக்கல் நாட்டியதோடு தமிழ்நாடு நகர்ப்புற பசுமை கொள்கை - 2026 ஐயும் முதலமைச்சர் வெளியிட்டார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் மாவட்ட தலைமை மருத்துவமனைகள்,

நுண்ணுயிரியல் ஆய்வுக்கூடங்கள், ஓமியோபதி பிரிவுக் கட்டடங்கள், கிராமப்புற சுகாதார நிலையக் கட்டடங்களையும் அவர் திறந்து வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் குளிர்சாதன இயந்திரங்கள், காற்றழுத்தக் கருவிகள் உற்பத்தி ஆலையையும் முதலமைச்சர் இன்று துவக்கிவைத்தார்.

*************

தங்கம் தென்னரசு

திமுகவின் திட்டங்களை பின்பற்றி அஇஅதிமுக தேர்தல் அறிக்கைகளை வெளியிடுவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு குறை கூறியுள்ளார்.

விருதுநகரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாவட்டத்தில் உள்ள கல்குறிச்சியில் நாளை கட்சியின் இளைஞர் அணி தென்மண்டல நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளதாக குறிப்பிட்டார்.

திமுகவின் தேர்தல் அறிக்கை சிறப்பான அம்சங்களை உள்ளடக்கி இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

*************

தண்ணீர் திறப்பு

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி வாணியாறு அணையிலிருந்து புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பகுதிகளின் வேளாண் பயன்பாட்டிற்கு இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

வரும் ஏப்ரல் ஒன்றாம் தேதிவரை திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் மோளையானூர், வெங்கடசமுத்திரம், தேவராஜபாளையம், புதுப்பட்டி உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமங்களை சார்ந்த 10 ஆயிரத்து 517 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதிபெறும்.

விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி சாகுபடியை அதிகரிக்க ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேபோல் நெல்லை மாவட்டம் களக்காடு வடக்கு பச்சையாறு அணையிலிருந்து, பிசான சாகுபடிக்காக, இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

*************

இருவரி

திருவண்ணாமலை உழவர் சந்தையில் தினசரி இயற்கை சந்தையை ஆட்சித்தலைவர் திரு.தர்ப்பகராஜ் இன்று தொடங்கிவைத்தார்.

பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அரணாரை கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் வரும் 11-ம் தேதி நடைபெறுகிறது.

பொதுமக்கள் இதில் கலந்துகொண்டு கோரிக்கை மனுக்களை அளிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

*************

கிரிக்கெட்

ஹராரேயில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்திற்கு எதிராக டாஸ் வென்று முதலில் பேட் செய்யும் இந்தியா சற்றுமுன் 11 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 88 ரன் எடுத்திருந்தது.

*************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது